# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2021 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**வினாத்தாள் பற்றிய கண்ணோட்டம் :**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக (தலா 05 புள்ளிகள் வீதம்) நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக (தலா 10 புள்ளிகள் வீதம்) மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக (15 புள்ளிகள், 15 புள்ளிகள், 20 புள்ளிகள்) மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை. ஆனால் சில பரீட்சார்த்திகள் நன்றாக விடை அளித்திருந்தனர்.

**பகுதிரீதியான செயலாற்றுகை:**

**பகுதி A** ஆனது 20 புள்ளிகளுக்காக 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 1 | திருப்தியானது |
| 2 | சராசரியானது |
| 3 | சராசரியானது |
| 4 | திருப்தியானது |

**பகுதி B** ஆனது 30 புள்ளிகளுக்காக 3 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 5 | திருப்தியானது |
| 6 | திருப்தியானது |
| 7 | சராசரியானது |

**பகுதி C** ஆனது 50 புள்ளிகளுக்காக 3 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 8 | சராசரியானது |
| 9 | திருப்தியானது |
| 10 | சராசரியானது |

## பகுதி A

### வினா இல. 01

இந்த வினா தொழிற்பாடு மூலதனச் சுற்றுக் காலம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் மொத்த இலாபம், விற்பனைக் கிரயம், தொக்கு இருப்புக் காலம் மற்றும் வியாபார வருமதிகள் காலம் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

- இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.
- அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் அளிக்கப்பட்ட விடைகளும் பொருத்தமானதாக இருந்தன.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபம் மற்றும் விற்பனைக் கிரயத்தைத் பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். எனவே, தொக்கு இருப்புக் காலத்தின் கணிப்பீடு தவறாக அமைந்ததுடன் இது இறுதியாக, தொழிற்பாடு மூலதனச் சுற்றுக் காலத்தின் கணிப்பீட்டிலும் வழுவை ஏற்படுத்தியது.

தொழிற்பாடு மூலதனச் சுற்றுக் காலத்தின் கணிப்பீட்டிற்கு முக்கியமான காரணியாக இருக்கின்ற இருப்புப் புரள்வுக் காலம் மற்றும் கடன்பட்டோர் காலப்பகுதி என்பவற்றைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகளால் சராசரி இருப்பு மற்றும் சராசரி வியாபாரக் கடன்பட்டோர் என்பன கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்சார்த்திகள் தமது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள சுய கற்றல் புத்தகத்தையும் மேலதிக கற்றல் புத்தகங்களையும் படிக்க வேண்டும் என்பதுடன் இந்த வகையான வினாக்களிலும் பயிற்சி எடுத்தல் வேண்டும்.

### வினா இல. 02

தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் நிதி முன்னோக்குக்கான செயலாற்றுகை அளவீடுகளுக்கான இரண்டு (02) உதாரணங்களையும் சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் வாடிக்கையாளர் முன்னோக்குக்கான செயலாற்றுகை அளவீட்டிற்கு ஒரு (01) உதாரணத்தையும் அடையாளங் காண்பது பரீட்சிக்கப்பட்டதுடன், சமப்படுத்தப்பட்ட புள்ளி அட்டையின் இரண்டு (02) பிரதிகூலங்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**செயலாற்றுகை:**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

பரீட்சார்த்திகள் இந்த வகையான வினாக்களில் முன்னரே பயிற்சி பெற்றிருக்கவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகள் எடுத்துக்காட்டான கேள்விகளை அவர்களாகவே பெற முடியும். சிலர் வினாவைச் சரியாக வாசிக்காது எண் பெறுமானங்களைக் கணிப்பிட்டிருந்தனர். **பகுதி (b)** இற்கு அளிக்கப்பட்ட விடைகள் மிகவும் திருப்தியற்றதாக காணப்பட்டன. இதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட பாடத்தைப் பரீட்சார்த்திகள் படித்திருக்கவில்லை என்பதாகும்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- சுய கற்றல் புத்தகத்திலுள்ள சம்பத்தப்பட்ட அத்தியாயத்தை சரியாக வாசித்து விளங்கிக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.
- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 03

இந்த வினா எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றொன்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

(1) இவ்வகையான வினாக்களில் போதியளவு பயிற்சிகள் செய்யப்படாதது அவதானிக்கப்பட்டது.

(2) சில பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றுக்குப் பதிலாக நெகிழ்ச்சிப் பாதீட்டைத் தயாரித்திருந்தனர்.

(3) உண்மையான நிலையான கிரயத்திற்குப் பதிலாக பாதிடப்பட்ட நிலையான கிரயம் கணிப்பீடுகளுக்காக எடுக்கப்பட்டிருந்தது.

(4) மாறும் கிரயத்தின் கணிப்பீடுகளிலிருந்து பிழையான உற்பத்தி பிரயோகிக்கப்பட்டதுடன் சிலர் இறுதித் தொக்கிருப்பைக் கவனத்தில் கொண்டிருந்தனர்.

(5) அதிகளவான பரீட்சார்த்திகளுக்கு எல்லைக் கிரயமிடலை அடிப்படையாகக் கொண்டு வருமானக் கூற்றைத் தயாரிப்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- சுய கற்றல் புத்தகத்தில் இந்தத் தலைப்பிலுள்ள பயிற்சி வினாக்களை வாசித்து, பயிற்சி பெறவும்.
- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 04**

இந்த வினா, சம்பத்தப்பட்ட கிரயமிடலைப் பயன்படுத்தி மேற்கொள்வதா அல்லது வாங்குவதா என முடிவெடுப்பது பற்றிப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

பெரும்பாலானவர்கள் சரியாகச் செய்திருந்த போதிலும் சிலர் மாறும் கிரயம் மீதான சேமிப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை. சிலர் எடுக்க வேண்டிய முடிவினை வழங்கியிருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கட்டளையை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்ற முடிவை தெளிவாகக் குறிப்பிடவும்.
- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 05**

இந்த வினா வரையறைக் காரணிகளை இனங்காண்பதையும் உத்தம உற்பத்திக் கலவையைக் கணிப்பதையும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

(1) **பகுதி (a)** ஆனது வரையறைக் காரணிகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் பொருள் CD ஐ வரையறைக் காரணியாகக் கண்டறியும்போது திறமையான கூலியானது ஒரு வரையறைக் காரணியா, இல்லையா என்பதை இனங்காணவில்லை. எனவே, அவர்கள் கணிப்பீடுகளைச் சரியாகக் காட்டாததால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

(2) பங்களிப்பைக் கணிப்பிடும்போது, மாறும் கிரயமொன்றாக மாறும் உற்பத்தி மேந்தலை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- கடந்தகால வினாக்கள் மற்றும் விடைகளில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 06**

இந்த வினா 2022 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டின் தயாரிப்பு பற்றிப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

(1) காசுப் பாய்வின் முன்னிலைப்படுத்தல் பின்பற்றப்படவில்லை. சிலர் வருமானம், மொத்த இலாபம் மற்றும் நிகர இலாபத்தைக் காட்டும் வருமானக் கூற்றொன்றாக காசுப் பாதீட்டைத் தயாரித்திருந்தனர். காசுப் பாதீடொன்றில் காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் மாத்திரமே உள்ளடக்கப்பட வேண்டும். அட்டுறுக் கொடுப்பனவுகள் காசுப் பாதீட்டில் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(2) சிலர் ஆகக் குறைந்தது ரூபா 1 மில்லியன் என்ற காசு மீதியைப் பேணுவதற்கான தேவையை இனங்காணத் தவறியிருந்தனர். எனவே, கடன் தேவை மற்றும் வட்டி சரியாக இனங்காணப் படவில்லை.

(3) பல பரீட்சார்த்திகள் கழிவுத் தொகையை காசு விற்பனையிலிருந்து கழித்திருக்கவில்லை. விற்பனைப் பெறுவனவுகளும் வழங்குநருக்கான கொடுப்பனவுகளும் பிழையாகக் கணிப்பிடப் பட்டிருந்தன.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- வினாவைச் சரியாக வாசிக்கவும்.
- கடந்தகால வினாத்தாள்களையும் சுய கற்றல் புத்தகத்தையும் படிக்கவும்.
- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 07**

இந்த வினாவானது சாதாரண பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- அதிகளவான பரீட்சார்த்திகள் கிரயத்தைக் கணிப்பிடுவதற்கு சரியான சூத்திரங்களைப் பயன்படுத்தவில்லை.
- WACC ஐக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் சந்தைப் பெறுமதிகளை எடுப்பதற்குப் பதிலாக ஏட்டுப் பெறுமதிகளை எடுத்திருந்தனர்.
- பெரும்பாலான பரீட்சார்த்திகளின் மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயத்திற்கான விடைகள் பிழையாகக் காணப்பட்டன.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும் – இதே மாதிரியான வினாக்கள் ஒவ்வொரு பரீட்சையிலும் மீண்டும் மீண்டும் பரீட்சிக்கப்படுகின்றன. எனவே, கடந்த கால வினாத்தாள்களை நன்கு படிக்கவும்.
- உரிமையாண்மைக் கிரயம், கடன் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றுக்கான சூத்திரங்களைச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கவும்.

## பகுதி C

### வினா இல. 08

இந்த வினா நேர் பொருள் விலை முரண், நேர் பொருள் கலவை முரண், நேர் பொருள் விளைவு முரண் ஆகியவற்றின் கணிப்பீட்டையும் **பகுதி (b)** இல் உண்மையான பங்களிப்புடனான பாதிடப்பட்ட பங்களிப்பை ஏற்பிசைவு செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றொன்றைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- அதிகளவான பரீட்சார்த்திகள் நேர் பொருள் விலை முரணைச் சரியாகக் கணிப்பிட்டு அதற்குரிய முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆனால் நேர் பொருள் கலவை முரண் மற்றும் நேர் பொருள் விளைவு முரண் ஆகியவற்றின் கணிப்பீடுகள் அவர்களுக்கு மிகக் கடினமானதாக மாறியிருந்தன.
- தொழிற்பாட்டுக் கூற்றில், பெரும்பாலானவர்கள் ஏற்கனவே வினாத்தாளில் தரப்பட்ட முரணைக் காட்டியதன் மூலம் சிறு புள்ளிகளை ஈட்டியிருந்தனர்.
- கலவை மற்றும் விளைவு முரண்களின் கணிப்பீட்டில் போதிய பயிற்சி இல்லாமை அவதானிக்கப்பட்டது.
- தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் போதிய பயிற்சி காணப்படவில்லை.
- சில பரீட்சார்த்திகள், முரண்கள் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதைக் காட்டியிருக்கவில்லை.

**மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்:**

இந்தப் பாடப் பரப்புகளிலுள்ள கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

### வினா இல. 09

இந்த வினா, நிகர இற்றைப் பெறுமதியைப் பயன்படுத்தி முதலீட்டுத் தீர்மானத்தை எவ்வாறு எடுப்பது என்பதைப் பரீட்சித்தது.

**செயலாற்றுகை:**

இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் மூலதனப் படிகளை 4 ஆண்டுகளுக்கு எடுப்பதற்குப் பதிலாக சகல 5 ஆண்டுகளுக்கும் எடுத்திருந்தனர்..
- பெரும்பாலான பரீட்சார்த்திகள் வருமான வரிக் கொடுப்பனவைப் பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். தேய்மானம் மற்றும் மூலதனப் படிச் சீராக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வரிக் கணிப்பீட்டை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றி பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவில்லை. சிலர் பராமரிப்புக் கிரயத்தை அனுமதிக்கத்தகாத செலவினம் ஒன்றாகச் சீராக்கியிருந்தனர்.
- பல கணித்தல் பிழைகள் அவதானிக்கப்பட்டன.
- சில பரீட்சார்த்திகள் இயந்திரக் கொள்வனவில் செலுத்திய பராமரிப்புக் கிரயத்தை எவ்வாறு பிரயோகிப்பது என்பது பற்றி சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. சிலர் பராமரிப்புக் கிரயத்தை ஐந்து ஆண்டுகள் ஈறாகப் பகிர்ந்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் நிலையான கிரயத்தைப் பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர்.
- சிலர் NPV ஐக் கணிப்பிட்டிருந்தனர் ஆயினும், அவர்கள் முடிவைத் தெரிவித்திருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுவதற்கு ஊக்கம் கொள்ளுதல் வேண்டும்.
- கணித்தல் வழுக்களைத் தவிர்க்கவும்.

**வினா இல. 10**

இந்த வினாவானது **பகுதி (a)** இல் செயன்முறைக் கிரயமிடல் பற்றிய அறிவையும், கம்பனி ஒன்றின் இலாப நட்டமற்ற விற்பனையை (BES) பெறுமதியில் கணிப்பிடுவதையும் ஒன்றித்த இலாபக் கனவளவு (PV) விகிதத்தைக் கணிப்பிடுவதையும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றினைத் தயாரிப்பதில், குறிப்பாக இறுதி WIP இற்கான சமான அலகுகளைக் கணிப்பிடுவதில் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.
- சிலர் சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதியைக் கவனத்தில் கொண்டிருக்கவில்லை.
- சிலர் கூற்றிற்கான அசாதாரண இலாபத்தின் சமான அலகுகள் மற்றும் கூற்றிலுள்ள சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி ஆகியவற்றை எடுத்திருக்கவில்லை.
- BES மற்றும் PV இன் கணிப்பீட்டில் பரீட்சார்த்திகளிடம் காணப்பட்ட தடுமாற்றம் காரணமாக பகுதி **(b)** இன் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை. மொத்த நிலையான கிரயத்தின் கிரயம் BES ஐக் கணிப்பிடும்போது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்:**

- மாதிரி வினாத்தாள்கள் உள்ளிட்ட கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

- * * * -